குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
S.T.C.2555/2024

அ.சா.4

2025–ம் ஆண்டு நவம்பர் 17–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரத்தினம் | தொழில் | |
| தந்தை பெயர் | சின்னன்னன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.35 மணி,

Accused Venkatachalam present. Advocate Mr.Jegatheesan present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தத்தில் குடியிருந்து, கிரானைட் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். சம்பவம் நடந்த இடத்திற்கும் எனது வீட்டிற்கும் சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு, ஒரு நாள் காலை 05.30 மணியளவில் நான் வீட்டிலிருந்து வெளியே வந்தபோது, விபத்து நடந்ததாக சொன்னார்கள்.

2. விபத்தில் காயமடைந்த இரண்டு பெண்மணிகள் என் வீட்டு வழியாக வந்தார்கள். அவர்களை மருத்துவமனைக்கு செல்ல உதவி வேண்டுமா என்று கேட்டேன். ஆனால் அவர்கள் வீட்டிற்கு செல்வதாக கூறிவிட்டு சென்றார்கள். அவர்களது பெயர் எனக்கு தெரியாது. மேற்படி காயமடைந்த இரண்டு பெண்மணிகளும் நடைபயிற்சிக்காக நடந்து சென்றபோது 63 சி அரசு பேருந்து மோதி விபத்து ஏற்படுத்திவிட்டதாக சொன்னார்கள்.

3. நாலுக்கால்பாளத்தில் இருந்து தின்னப்பட்டி செல்லும் சாலையில் கிழக்கு நோக்கி நடந்து சென்றபோது, அரசு பேருந்து கிழக்கு நோக்கி வந்து அவர்களது முதுகில்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:00:55 +0530

மோதியதாக சொன்னார்கள். மேற்படி பேருந்தை யார் ஓட்டி வந்தார்கள் என்று தெரியாது. போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 16.11.2023 ஆம் தேதி காலை 05.30 மணியளவில் காமலாபுரம் – நாலுக்கால்பாளம் சாலையில் கட்டிக்காரனூர் அருகே அ.சா.1, அ.சா.2 ஆகியோர் மேற்படி சாலையின் இடது ஓரமாக கிழக்கு நோக்கி நடந்து சென்றபோது, அதே சாலையில் அதே திசையில் அவர்களுக்கு பின்னால் டி.என்.30 என் 1202 என்ற பதிவெண் கொண்ட தடம் எண்.63 சி என்ற அரசு பேருந்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று அ.சா.1, அ.சா.2–ன் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்துவிட்டு மேற்கண்ட சங்கதிகளை விசாரணையில் கூறிவிட்டு, தற்போது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

5. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், செவிவழி செய்தியாக தான் எனக்கு தெரியும் என்றாலும் சரி. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் ஓட்டுநர் யாரென்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.45 மணி.**

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.17 18:00:59 +0530